முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 205/2014

இன்று 2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிச்சாமி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ரங்கப்ப கவுண்டர் | கிராமம் | : அங்கேரிபாளையம் |
| வயது | : 60 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 08-10-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) தாவாச் சொத்தை நானும் பிரதிவாதியும் கூட்டாக கிரயம் பெற்றோம் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் கட்டிடம் கட்டும்போது நானும் பிரதிவாதியும் கூட்டாக கடன் பெற்றோம் என்றால் சரிதான். என் முதல் விசாரணையில் என்.எஸ்.எம். பேப்ரிக்ஸ் நிறுவனத்தின் பொறுப்பை நான் தான் வைத்துள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்.எஸ்.எம். பேப்ரிக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. பிரதிவாதிக்கு வாடகை கொடுத்து வருவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் வாடகைக்கு விட்டுள்ளதாக சொல்லி உள்ளதற்கு வாடகை ஒப்பந்தமோ, பிரதிவாதி வாடகைதாரர் எனக் காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்தில் பிரதிவாதி இடையூறு செய்வதாக அனுப்பர்பாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) அ.வ.எண்.192/2012 என்ற வழக்கை இந்நீதிமன்றத்தில் இதே பரிகாரம் கோரி தாக்கல் செய்தேன் என்றால் சரிதான், அந்த வழக்கை நான் திரும்ப பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். மீண்டும் அதே பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதே பரிகாரம் கோரி தாக்கல் செய்த இந்த வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. அ.வ.எண்.192/2012 ல் நாங்கள் இருவரும் சேர்ந்து கட்டிடம் கட்டியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. அதன் தாவா நகலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) தாவாச் சொத்து சம்பந்தமாக பிரதிவாதி மாண்புமிகு கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் 14.02.2025 ல் முதல் நிலை தீர்ப்பாணை வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த 6 வது ஆவணமும் கம்பெனி பெயரில் தான் உள்ளது. தனிப்பட எனது பெயரில் இல்லை என்றால் சரிதான். கம்பெனிக்கான மின் கட்டணம், சொத்து வரி இருவர் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் அறிவிப்பு கொடுக்கவில்லை. கம்பெனி பெயரில் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி தாவாச் சொத்தில் கூட்டு உரிமையாளர் என்பதால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எதிராக பொய்யான விவரங்களை கொண்டு தாக்கல் செய்த இந்த வழக்கு செல்லாது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA
Digitally signed by VANITHA
Date: 2025.10.08 17:35:15 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.